भारतीय गैर न्यायिक

भारत

बीस रुपये

रु.20

Rs.20

TWENTY RUPEES

INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMIL NADU 23/07/2022. 02AC 662747

தேசியக் கல்லூரி
திருச்சி

D.கார்த்திக்
முத்திரைத்தாள் விற்பனையாளர்
உரிமம் எண்: 38/2021/TRY
ஸ்ரீரங்கம், திருச்சி

**தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி),**

**திருச்சி - 01**

மற்றும்

**சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், கோயம்புத்தூர் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது தமிழாய்வுத்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 620001 மற்றும் சர்வதேசத் தமிழ் ஆய்விதழும், 5/11 பெருமாள் கோயில் தெரு, நாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் – 641020 ஆகியோரிடையே கையெழுத்தாகிறது.

1. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கங்களாவன,
   - கல்லூரி மற்றும் ஆய்விதழ் இடையேயான முறையான தொடர்பை அமைத்துக் கொள்ளுதல்
   - கல்லூரி மற்றும் ஆய்விதழ் முன்னெடுக்கும் தமிழாய்வுப் பணிகளில் பரஸ்பரம் இணைந்து செயல்படுதல்.

2. **முன்மொழியப்பெறும் தீர்மானங்கள்**

- கல்லூரி மற்றும் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ் இணைந்து தமிழ்மொழி மற்றும் இலக்கிய ஆய்வுகளை உலகத்தரத்திற்கு மேம்படுத்தும் நோக்கிலான தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், மாநாடுகள், ஆய்வு மேம்பாட்டுப் பயிலரங்குகள்போன்றவற்றை நடத்துதல்.
- பன்னாட்டு தமிழறிஞர்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு தமிழ் ஆய்வுவளர்ச்சிக்கான முன்னெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்
- ஆசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களிடையே ஆய்வுத்திறனை மேம்படுத்துதல்
- ஆய்வு நூல்களைச் சர்வதேசத் தரத்துடன் வெளியிடுதல், வெளியிடும் நூல்களின் மதிப்பைச் சர்வதேச அளவிற்கு உயர்த்த தகுந்த ஆலோசனைகளையும் உதவிகளையும் நல்குதல்
- ஆய்வாளர்களுக்கும், ஆய்வறிஞர்களுக்குமிடையே ஆய்வுசார்ந்து உரையாடுவதற்கும் விவாதிப்பதற்குமான வாய்ப்புகளையும், அதற்கான சூழலையும் ஏற்படுத்தித்தருதல்
- ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் ஆய்வு நூல்களுக்கான சர்வதேசத் தரக்குறியீட்டு எண்களைப் பெற்றுத்தருவதில் ஆசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு உதவுதல்
- ஆய்வேடு மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதற்கும், ஆய்வைத் தரமாக மதிப்பீடு செய்வதற்கும் ஆய்வாளர்களுக்குப் பயிற்சியளித்தல்
- ஆய்வியல் அறம், ஆய்வியல் நெறிமுறைகள், ஆய்வியல் அணுகுமுறைகள், தற்கால ஆய்வுப்போக்குகள் முதலானவற்றை ஆய்வாளர்கள் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தல்.

3. இரண்டாம் இலக்கமிட்ட முன் மொழியப்பெறும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் இக்கல்லூரி நிறுவனத்திற்கோ, ஆய்விதழுக்கோ எந்தவொரு நிதிக்கடமையும் இல்லை.

4. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி நடைமுறைப்படுத்தப்பெறும் செயல்பாடுகள் யாவும் இந்திய அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டதாகவும், முறையான அனுமதிகள் பெற்றும் அமையப்பெற வேண்டியுள்ளது.

5. இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது இதில் கையெழுத்திடும் இருவர் அல்லது வேறு யாராலும் திருத்தம் செய்ய உகந்ததன்று.

6. இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது இதில் கையெழுத்திடும் நாளில் இருந்து (ஆகஸ்ட் 2022 முதல் ஜூலை 2024 வரை) இரண்டு ஆண்டுகள் நடைமுறையில் இருக்கக்கூடியது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது இதில் கையெழுத்திடும் இருவராலும் இவ்வொப்பந்தம் நடைமுறையில் இருக்கும் நாட்களில் எப்போது வேண்டுமானாலும் திருத்தம் செய்து கொள்ளலாம். யாரேனும் ஒருவர் இவ்வொப்பந்தத்தில் இருந்து விலகுவதனால் 60 நாட்களுக்கு முன்பே எழுத்து வடிவில் தெரிவிக்க வேண்டியது. அதன்பின்னர் ஒப்பந்த தீர்மானங்கள் இருதரப்பினருக்கும் செல்லுபடியாகாது.

7. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிகள் கோயம்புத்தூர் நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

8. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி கீழே கையெழுத்திடும் இருதரப்பினரும் தங்களால் நியமிக்கப்பெறும் நபர்களால் மேற்கூறிய பணிகளை நடைமுறைப்படுத்துவார்கள்.

**கல்லூரிக்காக**

28/7/22

Dr R. SUNDARARAMAN
Principal
National College (Autonomous)
Tiruchirapalli - 620 001

NATIONAL COLLEGE Autonomous Tiruchirappalli-1 Dr. 28/7/22

நாள் :

இடம் :

பொறுப்பாளர்

முனைவர் க. புவனேஸ்வரி
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
தேசியக்கல்லூரி (தன்னாட்சி),
திருச்சி – 620001

**ஆய்விதழுக்காக**

28/07/22

Dr.P.SASIREKHA
EDITOR
International Research Journal of Tamil
Coimbatore-641 020 India

நாள் : 28.07.22

இடம் : திருச்சி

க. புவனேஸ்வரி
28.7.22

முனைவர். க. புவனேஸ்வரி
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை
தேசியக் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி-620 001.

சாட்சிகள்

1. முனைவர் ச. ஈஸ்வரன்
   இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர்,
   தமிழாய்வுத்துறை,
   தேசியக்கல்லூரி (தன்னாட்சி),
   திருச்சி – 620001
2. முனைவர் வி. நந்தகோபாலன்
   துணைமுதல்வர்,
   இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர்(பொ),
   தாவரவியல்துறை,
   தேசியக்கல்லூரி (தன்னாட்சி),
   திருச்சி – 620001

28/7/2022

முனைவர் ச. ஈஸ்வரன்,
இணைப் பேராசிரியர் & தலைவர்,
தமிழ்த்துறை,
தேசியக்கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி - 620 001.

28/7/22

Dr. V. NANDAGOPALAN, M.Sc.,M.Phil.,Ph.D.,
Associate Professor & HOD I/C
Department of Botany
National College (Autonomous)
Tiruchirapalli-620 001,Tamil Nadu,India.